


தருமபுரி மேற்கு மாவட்டம் மோளையனூரில் உள்ள கழக முகாம் அலுவலகத்தில் கழகத்தின் "கொள்கை சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.உடன் ஆசிரியர் ராமகிருஷ்ணன் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

## பூவிருந்தவல்லி – வடபழனி மெட்ரோ ரயில் திட்டம்

# மு.க.ஸ்டாலினால் உருவாக்கப்பட்டது என்ற வரலாற்றை மறைக்க முடியாது!


### சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு வலைதளப் பதிவு!

நெல்லை, அக்.14 -

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

மதராஸ் என்ற பெயரை தூய தமிழில் "சென்னை" என்று தலைவர் கலைஞர் அவர்கள் மாற்றினார்.அதனை சிங்கார சென்னை ஆக்கும் வகையில் போக்குவரத்து நெரிசலை குறைத்திட 12 மேம்பாலங்களை கட்டித் தந்தவர் அன்றைய மேயர்.அன்புத் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.

உலக நகரங்களுக்கு ஈடு இணையாக சென்னையை உருவாக்கும் வகையில் தலைவர் கலைஞர் அவர்கள் மெட்ரோ ரயில் திட்டத்தை அறிவித்து பல எதிர்ப்புகளுக்கு இடையே அன்றைய துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை ஜப்பானுக்கு அனுப்பி பன்னாட்டு நிதி நிறுவனமான JICA உதவியோடு 2011ல் வெற்றிகரமாக மெட்ரோ1 ரயில் திட்டத்தை நிறைவேற்றிய நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் அன்றும் இன்று போல் கலைஞர் அவர்கள் மற்றும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ள இயலாத நிலையில் மெட்ரோ



ரயில் திட்டத்தை தொடர்ந்து எதிர்த்து வந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைக்கும் அரிய வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்ததும் கலைஞர் அவர்கள் மற்றும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் என்பது வரலாறு CMsir?

2021ல் தி.மு.க.ஆட்சி அமைந்ததும் இரண்டாம் கட்ட மெட்ரோ2 ரயில் விரிவாக்கத் திட்டத்தை மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கிய போது ஒன்றிய அரசு தரவேண்டிய நிதியை 2 ஆண்டுகளுக்கு மேல் தராமல் காலம் தாழ்த்திய போதிலும் மாநில அரசின் சொந்த நிதியில் மெட்ரோ ரயில் திட்டப் பணிகளை தொடர்ந்து விரைவாக செயல்படுத்தி 6 மாதங்களுக்கு முன்பே மு.க.ஸ்டாலின் அவர்களால் முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட திட்டத்தைத்தான் தற்போது ஒன்றிய பிரதமரும்.தமிழக முதல்வரும் திறந்திருக்கிறீர்கள் என்ற வரலாற்றை யாராலும் மறைக்க முடியாது CMsir?

"ஒன்றிய அரசும்.மாநில அரசும் இணைந்து வளர்ச்சி பயணத்தை முன்னெடுத்து கொண்டிருக்கிறோம்" என்று ஒன்றிய பிரதமரும்.தமிழக முதல்வரும் சொல்வதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது, தமிழ்நாட்டில் உள்ள விமான நிலையங்கள், துறைமுகங்கள்.ரயில்வே, மின்வாரியம், குடிநீர் வழங்கள் வாரியம், மற்றும் போக்குவரத்து உட்பட அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் முதல்வரின் நண்பர்களான "ஆந்திர ரெட்டி கேங்" மூலம் பிரதமரின் நண்பர்களான அதானி.அம்பானிக்கு தாரை வார்க்க துணிந்து விட்டீர்கள் என்பது தமிழ்நாடு மக்களுக்கு நன்றாகத் தெரிந்து விட்டது CMsir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த வீரமங்கை ஆசிய விளையாட்டுப் போட்டியில் (Asian Games – 2026) 400 மீட்டர் தடை ஓட்டத்தில் (Hurdles) பி.டி.உஷாவின் 42 ஆண்டு கால தேசிய சாதனையை முறியடித்து (54.75 வினாடிகள்) புதிய வரலாற்றுச் சாதனையும், 4*400 மீட்டர் ஓட்ட போட்டியில் (Relay) இந்திய அணி சார்பில் தங்கப் பதக்கமும், ஆசிய விளையாட்டில் ஒரே தொடரில் தங்கம், வெள்ளி, வெண்கலம் என மூன்று பதக்கங்களை வென்று இந்திய நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் கோவை மண்ணிற்கும் பெருமை சேர்த்து சென்னையில் கழக இளைஞரணி செயலாளர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வாழ்த்துக்களை பெற்ற கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி, மதுக்கரை ஒன்றியம் மீனாட்சிபுரம் பகுதியைச் சேர்ந்த தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ் அவர்களின் இல்லத்திற்கு கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி என்கிற சுதாகர் ஆகியோர் நேரில் சென்று மேலும் பல சாதனைகள் புரிய வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். உடன் மதுக்கரை மேற்கு ஒன்றிய செயலாளர் நந்தகுமார், முன்னாள் ஒன்றிய செயலாளர் ரகுநாதன், கிளை கழக செயலாளர்கள் கலங்கல் சிவக்குமார், அமிர்தராஜ், கனகராஜ், கழக நிர்வாகிகள் ஜெயபால், சுந்தரம், ரமேஷ் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் அறிக்கை!

*கிருஷ்ணகிரி, அக். 14 -*

*கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*கழகத் தலைவர், மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படியும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.*



*இக்கூட்டம் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவைத்தலைவர் அ.யுவராஜ் தலைமையில் நடைபெறுகிறது. கழக மறுசீரமைப்பு பணிகளுக்காக நியமிக்கப்பட்ட தலைமைக் கழக நிர்வாகிகளான மாநில ஆதிதிராவிடர் நலக் குழுச் செயலாளர் கிருஷ்ணசாமி, மாநில மகளிர் தொண்டரணிச் செயலாளர் திருமதி. நாமக்கல் ராணி ஆகியோர் இக்கூட்டத்தில் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இன்று 14.10.2026 (புதன் கிழமை) கீழ்க்கண்ட நேரங்களில், அந்தந்த சட்டமன்ற தொகுதிகளுக்கான ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற உள்ளன:*

*நண்பகல் 12.00 மணி வேப்பனப்பள்ளி சட்ட மன்றத் தொகுதி (இடம்: SAS மஹால், சூளகிரி)*

*நண்பகல் 2.00 மணி ஒசூர் சட்டமன்ற தொகுதி (இடம்: மாவட்ட கழக அலுவலகம், ஒசூர்)*

*மாலை 4.00 மணி தளி சட்டமன்ற தொகுதி (இடம்: சப்தகிரி மஹால், தேன்கனிகோட்டை)*

*அதுசமயம் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், இன்னாள் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணிகளின் துணை அமைப்பாளர்கள், அந்தந்த தொகுதிக்குட்பட்ட மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு செயலாளர்கள், கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

# யு.பி.ஐ. கட்டணத்துக்கு எதிராக பேட்ஜ் அணிந்து வணிகர்கள் போராட்டம்!

*சென்னை, அக் 14 -*

*யுபிஐ சேவை கட்டண விதிப்பை எதிர்த்து தமிழகம் முழுவதும் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*மத்திய அரசு டிஜிட்டல் மயமாக்கல் கொள்கையின் படி, வங்கி பணபரிவர்த்தனைகளை இலவச யுபிஐ பணபரிவர்த்தனைக்கு மாற்றி, பொது மக்களிடையே டிஜிட்டல் மய மாக்கலை ஊக்கப்படுத்தி வந்தது. இதை பெருவாரியான மக்கள் பயன்படுத்தி வரும் நிலையில், ரூ.2 ஆயிரத்துக்கு மேல் உள்ள யுபிஐ பணபரிவர்த்தனைக்கு அக்டோபர் 15 முதல் 0.4 சதவீதம் சேவை கட்டணம் விதிப்பதாகவும், அச்சேவை கட்டண விதிப்பை வணிகர்கள் தான் செலுத்த வேண்டும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*இதற்கு அகில இந்திய அளவில் மிகப் பெரும் எதிர்ப்பு உருவாகி இருக்கின்றது. இதை கண்டித்து தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில், எதிர்ப்பு பேட்ஜ் அணிந்து வியாபாரத்தில் ஈடுபடும் அறப்போராட்டம் சென்னை சிந்தாதிரிப் பேட்டை சந்தையில் நடைபெற்றது.*

*இதில் பேரமைப்பின் தலைவர் விக்கிரமராஜா பங்கேற்று, யுபிஐ பரிவர்த்தனைக்கு சேவைக் கட்டண விதிப்பு எதிர்ப்பு பேட்ஜை வியாபாரிகளுக்கு வழங்கி, அறவழிப் போராட்டத்தை தொடங்கி வைத்தார். இதேபோல் தமிழகம் முழுவதும் போராட்டம் நடைபெற்றது.*

*பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய விக்கிரமராஜா, "அமெரிக்கா ஈரான் வளைகுடா போர் பதற்றம் காரணமாக பெட்ரோல், டீசல், எரிபொருட்கள் விலை மிகப் பெரும் உயர்வை சந்தித்திருக்கின்றது. இந்த எரிபொருள் உயர்வால், பெருமளவு போக்குவரத்து கட்டணங்கள் உயர்ந்து, மக்கள் அன்றாட பயன்படுத்தும் பொருட்கள் விலை யேற்றம் கண்டிருக்கின்றது.*

*இந்தச் சூழலில் வணிகர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள யு.பி.ஐ. சேவை கட்டணமும், மேலும் விலைவாசி உயர்வுக்கு வழிவகுக்கும் என்ற அச்சம் வணிகர்களிடையே நிலவுகின்றது.*

*யு.பி.ஐ. சேவை கட்டணத்தை மத்திய அரசு தொலைநோக்கு சிந்தனையுடன் ரத்து செய்யவேண்டும் என, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின், தமிழகத்தில் அமைப்பு ரீதியாக உள்ள 61 மாவட்டங்களில் மாவட்ட தலைவர்கள் தலைமையில் முக்கிய நகர் பகுதிகளில் வணி கர்கள் அனைவரும் ஒன்று கூடி யுபிஐ சேவை கட்டண விதிப்பு எதிர்ப்பு பேட்ஜ் அணிந்தும், தங்கள் வணிக நிறுவனங்கள் மற்றும் கடைகளில் விளம்பரத்தட்டிகள் வைத்தும், மத்திய அரசை வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் வணிகர்கள் ஒன்றுபட்டு முதற் கட்ட அறவழிப்போராட்டம் நடத்தி இருக்கிறோம்.*

*இதில் பேரமைப்பின் மாநில தலைமைச் செயலாளர் ஆர்.ராஜ்குமார், மாநில கூடுதல் செயலாளர் வி.பி.மணி, மாநிலத் துணைத் தலைவர் எம்.எஸ்.பஷீர் அகமது, மத்திய சென்னை மாவட்டத் தலைவர் எஸ்.சாமுவேல், செயலாளர் ஏ.ஷேக்முகைதீன், பொருளாளர் ஏ.சத்தியரீகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.*

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. கழக மறுசீரமைப்பு ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் அறிக்கை!

*கிருஷ்ணகிரி, அக. 14 -*

*கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*கழகத் தலைவர், தளபதியார் அவர்களின் ஆணைப்படியும்,*

*கழக இளைஞர் அணி செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இளம் தலைவர் அவர்களின் ஆலோசனைபடியும்*

*கிருஷ்ணகிரி கிழக்கு*



*மாவட்ட தி.மு.க. கழக மறுசீரமைப்பு ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் நடைபெற உள்ளது.*

*இந்தக் கூட்டத்தில் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள மேலிடப்பார்வையாளர்கள் மாநில ஆதிதிராவிட நலக் குழு செயலாளர்*

*முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்ஆர்.கிருஷ்ணசாமியும்,*

*திராவிட முன்னேற்றக் கழக மகளிர் தொண்டர் அணி மாநில செயலாளர் நாமக்கல் திருமதி.ப. ராணியும் கலந்து கொண்டு தி.மு.க. கழக மறுசீரமைப்பு குறித்து தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ள கருத்துக்களை எடுத்துரைக்க உள்ளார்கள்.*

*இந்தக் கூட்டங்கள் வருகிற 15.10.2026 வியாழக் கிழமை காலை 0930 மணிக்கு ஊத்தங்கரை சட்டமன்ற தொதிக்கான கூட்டம் ஊத்தங்கரை, S.V.S திருமண மண்டபத்திலும்,*

*மதியம் 1200 மணிக்கு பர்கூர் சட்டமன்ற தொகுதிக்கான கூட்டம்,*

*பர்கூரில் உள்ள சஞ்சீவி மஹாலிலும்,*

*மதியம் 0300 மணிக்கு கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்கான கூட்டம்,*

*கிருஷ்ணகிரி, ஸ்ரீ தேவராஜ் மஹாலிலும் நடைபெற உள்ளது.*

*இந்த கூட்டங்களில் அந்தந்த சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட தலைவர்,*

*துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**அம்பத்தூர் பா. இரவைக்கண்ணன்**

**அக்டோபர் 14 (1992)**



**அம்பத்தூர் நகரக் கழகத்தின் செயலாளராக பல ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார். மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.**

**துணிவுமிக்க உள்ளம்! பணிவுமிக்க பண்பாடு! கொள்கையில் உறுதி! குறிக்கோளுக்காக தியாகம் செய்யும் இயல்பு! என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக்கழக அறிவிப்பு

சென்னை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் துரை.கண்ணன் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் :12.10.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்.
தி.மு.க.



மதுராந்தகம் அடுத்த அருங்குணம் கிராமத்தில் சதீஷ் அவர்களின் தந்தை முத்துகிருஷ்ணன் (வயது 76) அவர்கள் மறைவையொட்டி நேற்று காலை கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் நேரில் சென்று மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அக்குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் மாநில இளைஞரணி துணைச்செயலாளர் அப்துல் மாலிக், ஒன்றிய செயலாளர் பொன். சிவக்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆன்டோ சிரில் ராஜ், கிளை கழகச் செயலாளர் சேகர் மற்றும் மதுராந்தகம் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் இருந்தனர்.